# தடம்

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி 2010

NEWS LETTER THADAM

J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI Jaunary - *Apirl*

VOLUME 3 ISSUE 1



## நிறுவுநர் நாள் - 2010



எமது கல்லூரியின் நிறுவுநர் அமரர் திரு வி.தாமோதரம்பிள்ளை அவர்களை நினைவு கூருமுகமாக கல்லூரி நிறுவுநர் தினம் 05.02.2010 வெள்ளிக்கிழமை காலை அருணாசலம் மண்டபத்தில் அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. எமது கல்லூரியின் மிக முக்கியமான நிகழ்வாகவும் இவ்வருடத்திற்கான முதல் நிகழ்வாகவும் இது அமைந்திருந்தது.

முதன்மை அதிதியாக பேராசிரியர் மா.சின்னத்தம்பி (கல்வியியல் பேராசிரியர் தலைவர் சட்டத்துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். வழமைபோல இவ்வருடமும் கல்லூரிச் சஞ்சிகை தாமோதரன் பதினான்காவது இதழ் வெளியீட்டு நிகழ்வும், அன்றைய தினம் சிறப்பாக இடம்பெற்றது. சஞ்சிகை வெளியீட்டுரையை நிகழ்த்துவதற்காக திரு ச.சலீசன் (ஆசிரியர் கல்வியியலாளர், யாழ்/கல்வியியற் கல்லூரி) அவர்கள் வருகை தந்திருந்தார்.

பான்ட் வாத்திய அணியினருடன் அதிபர், ஆசிரியர்கள், மாணவ முதல்வர்கள், சாரணர்கள் ஆகியோரினால் விருந்தினர்கள் மேடைக்கு அழைத்துவரப்பட்டு விழா ஆரம்பமாகியது. பிரதி அதிபர் திரு வே.கந்தசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.





கல்லூரி முதல்வர் அவர்கள் தமது தலைமையுரையிலே அமரர் திரு வி.தாமோதரம்பிள்ளை அவர்களை நினைவுகூர்ந்ததுடன் அவரது நல்லெண்ணமும், தர்மசிந்தையுமே இன்றைய எமது கல்லூரியின் தோற்றத்திற்கு வித்தாய் அமைந்தன என்றார். அப்பெருமகனாரின் அரும்பணியினால் இன்று எத்தனையோ ஆயிரம் மாணவர்கள் அறிவொளி பெற்று உலகின் பல பாகங்களிலும் சிறந்த நிலையிலே கல்லூரியின் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றனர். எனவும் குறிப்பிட்டார்.

“வடமாகாணத்தில் பொதுக் கல்வி சில வளர்ச்சிச் சிந்தனைகள்” என்ற தலைப்பிலான நிறுவுநர் நினைவுப் பேருரையை முதன்மை விருந்தினர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி அவர்கள் நிகழ்த்தினார். பாடசாலைக் கல்வியில் தாக்கம், புதிய மாற்றங்களும் பிரச்சினைகளும், வடக்கில் பொதுக் கல்வி நிலைமை, தவணைப் பரீட்சையும் பாடசாலை மட்டக் கணிப்பீடும், எதிர்காலக் கவனக் குறிப்புக்குரிய விடயங்கள், மென்திறன் விருத்தியும் தனியார் தொழில் நாட்டம் வளர்த்தலும் ஆகிய அம்சங்களை உள்ளடக்கியதாக இன்றைய காலத் தேவை

நோக்கிய பேருரையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சஞ்சிகை வெளியீட்டுரையை நிகழ்த்திய ஆசிரியர் கல்வியியலாளர் திரு ச.லலீசன் அவர்கள் தமது உரையிலே தாமோதரன் சஞ்சிகையின் அத்தனை அம்சங்களும் தரம்வாய்ந்ததாகவும், கல்லூரியின் தனித் துவத்தைப் பறை சாற்றுவனவாகவும் அமைந் துள்ளன என்றார். மாணவர் பகுதி மிக நீண்டதாக அமைந்திருப்பது கண்டு பாராட்டியதோடு எதிர்காலத்தில் சிறந்த படைப்பாளிகளை உருவாக்குவதற்கான சிறந்த களமாக இது விளங்குகின்றது எனவும் குறிப்பிட்டார். திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டு சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளமை பற்றியும் குறிப்பிட்டார்.



கல்லூரிச் சஞ்சிகை தாமோதரனின் முதற்பிரதியை முதன்மை விருந்தினர் அவர்களிடமிருந்து திரு ந.சிவபாலன் (அம்பிகா மருந்தக உரிமையாளர், சாவகச்சேரி) அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும் முன்னாள் அதிபர் திரு இ.கயிலைநாதன் மற்றும் பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதி நிதிகள் கல்லூரியின் வளர்ச்சியில் துணை நின்று பணியாற்றும் முக்கியஸ்தர்கள், ஆசிரிய சகோதரத்துவத் தலைவர், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

திருமதி கமலாம்பிகை ஸ்ரீதரன் ஆசிரியை அவர்களின் பதிலுரையுடனும், உப அதிபர் திரு சி.த.இரத்தினம் அவர்களின் நன்றியுரையுடனும் நிறுவுநர் தினவிழா சிறப்புற நிறைவு பெற்றது.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2010




எமது கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி 12.02.2010 வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு கு.சிவபாலன் (பொறியியலாளர் பாடசாலை வேலைகள் பகுதி, மேலதிக மாகாணக்கல்வி அலுவலகம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்வி பணிப்பாளர்கள், எமது கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு இ.கயிலைநாதன் அவர்கள், அயற்கல்லூரி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்மாவட்ட பிரதி அமைப்பாளர் திரு அலெக்சாண்டர் சாள்ஸ் அவர்கள், மேலும் நலன் விரும்பிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மிகச் சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்ட இல்ல மெய்வல்லுநர் போட்டி என அனைவரும் பாராட்டிச் சென்றமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மேலும் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் இவ்வருடம் 317 புள்ளிகளைப் பெற்று தாமோதரம் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. ஏனைய இல்லங்களின் நிலைகள் பின்வருமாறு

| | |
|---|---|
| ஆனந்தா இல்லம் | - 269 1/2 புள்ளிகள் |
| ஸ்ரீசுமங்கலா இல்லம் | - 252 புள்ளிகள் |
| நேரு இல்லம் | - 251 1/2 புள்ளிகள் |
| முத்துக்குமாரு இல்லம் | - 211 புள்ளிகள் |

அஞ்சலோட்டத்திற்கான வெற்றிக் கிண்ணத்தை இம்முறை நேரு இல்லம் பெற்றுக் கொண்டது. அணிநடைக்கான மதிப்பீடு இம்முறை

ஆண், பெண் எனப் பகுக்கப்பட்டு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆண்கள் அணிகளில் தாமோதரம் இல்லம் முதலிடத்தையும், ஸ்ரீசுமங்கலா இல்லம் இரண்டாமிடத்தையும், ஆனந்தா இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. பெண்கள் அணிகளில் ஸ்ரீசுமங்கலா, தாமோதரம் ஆனந்தா ஆகிய இல்லங்கள் முறையே முதலாம் இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.









♦சிறந்த வீர, வீராங்கனைகளாகத் தெரிவு செய்யப்பட்டோர்.

13 வயதின் கீழ் ஆண் - T.விதுசன் (ஆனந்தா)
13 வயதின் கீழ் பெண் - S.அபிராமி (தாமோதரம்)
13 வயதின் கீழ் பெண் - யு.சிந்துஜா (தாமோதரம்)
15 வயதின் கீழ் ஆண் - T.அஜந்தன் (முத்துக்குமாரு)
17 வயதின் கீழ் ஆண் - R.கிரிசாந் (ஆனந்தா)
17 வயதின் கீழ் பெண் - R.அகல்யா (முத்துக்குமாரு)
17 வயதின் கீழ் பெண் - S.பைரவி (முத்துக்குமாரு)
19 வயதின் கீழ் ஆண் - Y.சாம்டீபன் (ஸ்ரீசுமங்கலா)
19 வயதின் கீழ் ஆண் - M.துஷ்யந்தன் (நேரு)
19 வயதின் கீழ் பெண் - M.தாளினி (ஸ்ரீசுமங்கலா)
21 வயதின் கீழ் ஆண் - N.கேதீசன் (முத்துக்குமாரு)
21 வயதின் கீழ் ஆண் - S.தர்சன் (நேரு)
21 வயதின் கீழ் ஆண் - R.துபேந்திரன் (ஆனந்தா)
21 வயதின் கீழ் பெண் - N.நித்தியா (ஸ்ரீசுமங்கலா)
21 வயதின் கீழ் பெண் - V.நிசாந்தினி - (ஆனந்தா)

♦இல்ல ரீதியான அஞ்சலோட்டப் புள்ளிகள் விபரம்:

நேரு - 70 புள்ளிகள்
ஆனந்தா - 64 புள்ளிகள்
தாமோதரம் - 61 புள்ளிகள்
ஸ்ரீசுமங்கலா - 47 புள்ளிகள்
முத்துக்குமாரு - 43 புள்ளிகள்

இல்லங்களுக்கிடையே நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம்

♠15 வயதின் கீழ் ஆண்
1ம் இடம் (தாமோதரம்)
2ம் இடம் (முத்துக்குமாரு)

♠15 வயதின் கீழ் பெண்
1ம் இடம் (ஸ்ரீசுமங்கலா)
2ம் இடம் (நேரு)

♠19 வயதின் கீழ் ஆண்
1ம் இடம் (தாமோதரம்)
2ம் இடம் (ஆனந்தா)

♠19 வயதின் கீழ் பெண்
1ஆம் இடம் (நேரு)
2ஆம் இடம் (ஆனந்தா)

## பெருவிளையாட்டுக்கள்

### ♣ வலைப்பந்து

♠15 வயதின் கீழ் 1ம் இடம் (நேரு)
2ம் இடம் (ஸ்ரீசுமங்கலா)
♠17 வயதின் கீழ் 1ம் இடம் (ஸ்ரீசுமங்கலா)
2ம் இடம் (நேரு)
♠19 வயதின் கீழ் 1ம் இடம் (ஆனந்தா)
2ம் இடம் (ஸ்ரீசுமங்கலா)

### ♣மென்பந்து

19 வயதின் கீழ் ஆண் 1ம் இடம் (ஸ்ரீசுமங்கலா)
19 வயதின் கீழ் பெண் 1ம் இடம் (நேரு)

### ♣கரப்பந்து

♠15 வயதின் கீழ் ஆண் -1ம் இடம் (முத்துக்குமாரு)
♠15 வயதின் கீழ் பெண் - 1ம் இடம் (ஸ்ரீசுமங்கலா)
♠17 வயதின் கீழ் ஆண் - 1ம் இடம் (நேரு)
♠17 வயதின் கீழ் பெண் - 1ம் இடம் (தாமோதரம்)
♠19 வயதின் கீழ் ஆண் - 1ம் இடம் (ஸ்ரீசுமங்கலா)
♠19வயதின் கீழ் பெண் - 1ம் இடம் (ஸ்ரீசுமங்கலா)

எமது கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டியில் நீண்ட நாட்களின் பின்னர் இம்முறை பாண்ட் அணியினரின் அணிவகுப்பும் சிறப்புற இடம்பெற்றது. மிகவும் சிறப்பான இடைவேளை நிகழ்வொன்றும் இடம்பெற்றது. அனைத்து நிகழ்வுகளும் சிறப்புறப் பணியாற்றிய மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்களே!

## எமது கல்லூரி விளையாட்டுச் செயற்குழு

விளையாட்டுத்துறைச் செயலாளர் திரு த.இரகுலேசன், உப செயலாளர், திருமதி இ.திருவாசகன் ஆகியோரது அயராத முயற்சியும் பொறுப்புமிக்க பணியாற்றுகையும் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கு வளம் சேர்ப்பனவாக அமைந்துள்ளன. அத்துடன் விளையாட்டுச் செயற்குழுவின் திட்டமிட்ட ஒழுங்கமைந்த செயற்பாடுகளும் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

**செயற்குழு உறுப்பினர்கள்**

அதிபர் - திரு அ.கயிலாயபிள்ளை
பிரதி அதிபர் - திரு வே.கந்தசாமி
பிரதி அதிபர் - திரு ந.பாலச்சந்திரன்
உப அதிபர் - திரு சி.த.இரத்தினம்
விளையாட்டுச் செயற்குழு செயலாளர் - திரு த.இரகுலேசன்
உபசெயலாளர் - திருமதி இ.திருவாசகன்
திரு த.பாலசண்முகநாதன்
திரு ந.இரவிக்குமார்
திரு கு.சசிதரன்
செல்வி இ.நடராசா
திருமதி வ.சுகீரதன்
திருமதி சுதமதி
செல்வி கி.பிரபாநந்தினி
திரு ப.சுரேஸ்

## யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி விளையாட்டுக் கழகம்

மேற்படி கழக அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 23.02.2010 செவ்வாய்க் கிழமை அதிபர் அவர்கள் தலைமையில் எமது கல்லூரியில் நடைபெற்றது. விளையாட்டு வீரர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் மாணவர்கள் விளையாட்டில் ஆர்வத்தோடு பங்குபற்றுவதற்கான களத்தை அமைத்துக் கொடுப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

போஷகர் - திரு அ.கயிலாயபிள்ளை (அதிபர்)
பொறுப்பாசிரியர் - திரு த.இரகுலேசன்
திருமதி இ.திருவாசகன்
தலைவர் - செல்வன் யோ.சாம்பன்
உபதலைவர் - செல்வி ம.தாளினி
செயலாளர் - செல்வன் ம.துஷ்யந்தன்
உபசெயலாளர் - செல்வி ஜெ.நிரோஜா
பொருளாளர் - செல்வன் ம.டெல்சன்
இணை பொருளாளர் - செல்வி சி.காருண்யா

செயற்குழு உறுப்பினர்கள்

13 வயதின் கீழ் செல்வன் - த.விதுசன்
செல்வி - சி.அபிராமி
15 வயதின் கீழ் - செல்வன் த.அஜிந்தன்
செல்வி ம.மதுராந்தகி
17 வயதின் கீழ் - செல்வன் ந.பானுகோபன்
செல்வி S.கிருஷ்ணவேணி
19 வயதின் கீழ் - செல்வன் சி.அகிலன்
செல்வி T.அனோஜினி
21 வயதின் கீழ் - செல்வன் இ.துபேந்திரன்
செல்வி வி.நிஷாந்தினி

இக்கழகச் செயற்பாடுகள் சிறப்புற அமைந்து விளையாட்டுச் செயற்பாடுகள் வளர்ச்சியடைய நாமும் தடம் செய்தி ஏட்டினூடாக வாழ்த்துகின்றோம்.

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

எமது கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம் கடந்த 13.12.2009 அன்று கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. நடப்பு ஆண்டிற்கான நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு இடம்பெற்றது.

தலைவர் - திரு அ.கயிலாயபிள்ளை (அதிபர்)
உபதலைவர் - திரு ந.பாலச்சந்திரன் (பிரதி அதிபர்)
செயலாளர் - திரு யோ.ஜெயக்குமார்
உப செயலாளர் - திரு ஆ.கதிர்காமநாதன்
பொருளாளர் - திரு சி.கமலரூபன்

நிர்வாக சபை உறுப்பினர்:

| | |
|---|---|
| திரு செ.செந்தூரன் | திரு இ.நித்தியானந்தன் |
| திரு கு.சதாசிவமூர்த்தி | திரு தி.முருகதாசன் |
| திரு சு.சிவானந்தன் | திரு கே.பிரதீபன் |
| திரு சு.தர்மலிங்கம் | திரு ச.நவரத்தினம் |
| திரு த.மஞ்சூரன் | திரு ஆ.தங்கவேல் |

இக்கூட்டத்தில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்யவும், மாணவர்களுக்கான ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமுகமாகவும் ஒரு நிதி சேகரிப்புத் திட்டத்தை தயார் செய்து அமுல்படுத்ததுவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமான சிறப்பம்சமாகும். எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு தக்க தருணத்தில் தக்கவாறு பணியாற்றும் பழைய மாணவர் சங்கச் செயற்பாடுகள் சிறப்புற தடம் செய்தி ஏட்டினூடாக வாழ்த்துவதில் நாமும் பெருமகிழ்ச்சி யடைகின்றோம்.

## உள்ளக பயிற்சி ஆசிரியர்கள்

கடந்த ஆண்டு உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களாக இணைந்து எமது கல்லூரியில் சிறப்புறப் பணியாற்றி தமது பயிற்சியை நிறைவு செய்த செல்வி ச.இந்துஜா, செல்வி க.கிருத்திகா ஆகிய ஆசிரியர்கள் மேலும் சிறந்த கல்விப்பணியாற்ற வாழ்த்துவதோடு இவ்வருடம் எமது கல்லூரிக்கு உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களாக வருகை தந்துள்ள செல்வி செ.திசாளினி, செல்வி தேனுகா, திரு செந்தூரன் ஆகியோரை வரவேற்கின்றோம். இவர்கள் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

## சேவையைப் போற்றுகின்றோம்



எமது கல்லூரியில் பதினேழு ஆண்டுகளாக கணித பாடத்தைச் சிறப்புறக் கற்பித்து மாணவர் உள்ளங்களில் நிலைத்து விட்டவர் திரு பூ.செல்வநாயகம் ஆசிரியர் அவர்கள் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாது எமது கல்லூரிச் சிக்கனக் கடனுதவிச் சங்கத்தின் தலைவராக, ஒழுக்காற்றுச் சபை உறுப்பினராக, விளையாட்டுச் செயற்குழு உறுப்பினராக இருந்து அரும்பணியாற்றியுள்ளார். நிர்வாகம் சார்ந்த செயற்பாடுகளிலும் அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர் கல்லூரி ஆவணங்களை கணனி மயப்படுத்துவதில் நிர்வாகத்திற்கு மிகுந்த ஒத்துழைப்பு வழங்கியவர். மாணவர்க்கு மட்டுமன்றி ஆசிரியர்க்கும் தக்க தருணத்தில் தேவையான ஆலோசனைகள் கூறுவதன் மூலம் எல்லோரதும் அன்புக்குப் பாத்திரமாக விளங்கியவர். ஆசிரியர் அவர்களது ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வேண்டுமென கல்லூரிச் சமூகம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

## பாராட்டுகின்றோம்



எமது கல்லூரிஆசிரியர் திரு வே.ஞானசம்பந்தன் அவர்கள் கடந்த வருடம் நடைபெற்ற முதுகலைமாணித் தேர்வில் விசேடசித்தி பெற்று முகலைமாணிப் பட்டம் பெற்றுள்ளார். மேலும் உயர்வுகள் பெற வேண்டுமெனவும் இந்துவின் வளர்ச்சியில் இவரது சேவை சிறக்க வேண்டுமெனவும் வாழ்த்துகின்றோம்.

## போட்டிகள் சாதனைகள்

### மாகாண மட்ட கணித விஞ்ஞானப் போட்டி

வடக்கு மாகாண மட்ட கணித விஞ்ஞானப் போட்டியில் பின்வரும் மாணவர்கள் பங்குபற்றி வெற்றிபெற்று எமது கல்லூரிக்குப் புகழ் சேர்த்துள்ளனர்.

**கணிதம் (தமிழ்)**

தரம் 6 செல்வி இரவிக்குமார் விஹானி - 1ஆம் இடம்
தரம் 9 செல்வன் தவராசா செந்தாளன் - 2ஆம் இடம்





**கணிதம் (ஆங்கிலம்)**

தரம் 6 செல்வி ஜெயகணேசன் ஜெயதாரணி 3ஆம் இடம்

## விளையாட்டு

வலய ரீதியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகள்

15 வயது ஆண்கள் - 2ம் இடம்
19 வயது ஆண்கள் - 2ம் இடம்
15 வயது பெண்கள் - 1ம் இடம்

**மென்பந்து (கிரிக்கெற்) வலய நிலை**

19 வயதின் கீழ் பெண் - 1ம் இடம்
19 வயதின் கீழ் ஆண்கள் - 1ம் இடம்

**மேசைப்பந்து (வலய நிலை)**

19 வயதின் கீழ் ஆண்கள் - 3ம் இடம்

## தமிழ்த்தினம் - 2010

**◆பாடசாலை மட்டப் போட்டி முடிவுகள்**

வாசிப்பு - பிரிவு II

1. ப.சஜீபன் 1 6B
2. செ.வித்தகி 2 6D
3. சோ.கோகுல் 3 7C

**பேச்சு**

பிரிவு II

1. ற.நிசாந்தன் 1 7B
2. உ.சங்கவி 2 7D

பிரிவு III

1. சி.கார்த்தகா 1 8E
2. அ.அதுர்சனன் 2. 9B

| | |
|---|---|
| 3. செ.வித்தகி 3 6D | 3. த.குணவதனி 3. 8F |

| பிரிவு IV | பிரிவு V |
|---|---|
| 1. ஸ்ரீ.கிறிடி 1 10A | 1. க.நிரோஜனி 1 12A4 |
| 2. வே.திரிஷா 2 10F | 2. ச.குகப்பிரியா 2 12A4 |
| 3. வே.லதுஜா 3 11F | 3. ச.தர்சிகா 3 12A4 |

## கட்டுரை

| பிரிவு II | பிரிவு III |
|---|---|
| 1. சி.சோபனா 1 7D | 1. சி.கிரிஷிகா 1 8D |
| 2. இ.விஹானி 2 7D | 2. தி.நவலாயினி 2 9E |
| 3. சி.யாழினி 3 7E | 3. கு.கௌசிகா 3 8D |

| பிரிவு IV | பிரிவு V |
|---|---|
| 1. ப.பவித்திரன் 1 11A | 1. தி.மீரா 1 12A3 |
| 2. இ.நிதீஸ்ராம் 2 11A | 2. த.நிதர்சனா 2 12A1 |
| 3. பி.பிறேமிஷா 3 10D | 3. ச.தர்சிகா 3 12A4 |

## பாவோதல்

| பிரிவு II | பிரிவு III |
|---|---|
| 1. கு.தக்ஷா 1 7E | 1. வே.லமினா 1 9F |
| 2. ற.நிஷாந்தன் 2 7B | 2. இ.அர்ச்சனா 2 8D |
| 3. தா.சானுஷன் 3 7A | 3. ர.சிருஷ்டிகா 3 9E |

| பிரிவு IV | பிரிவு V |
|---|---|
| 1. ப.நிதுர்சன் 1 11A | 1. த.சஞ்சியா 1 12A1 |
| 2. சு.சுகேனியா 2 10F | 2. பா.பாலநிருத்தனா 2 12A2 |
| 3. இ.சஜீபனா 3 10D | 3. க.கஜீபன் 3 12A1 |

## இலக்கணப் போட்டி

பிரிவு IV

1. இ.இராஜப்பிரவிந்தன் 1 11B
2. ஸ்ரீ.றம்யா 2 11D
3. கி.நிவேதிகா 3

பிரிவு V

1. ச.குகப்பிரியா 1 12A2
2. ச.சலூசா 2 12A1
3. சி.கஸ்தூரி 3 12A3

## கவிதை

பிரிவு IV

1. பொ.கஸ்ரோ 1 10A
2. இ.இராஜப்பிரவிந்தன் 2 11B
3. தி.ஆரணி 3. 10D

பிரிவு V

1. க.பிரியதர்சனா 1 12A3
2. சி.துனேஷா 2 12A4
3. க.கிருத்திகா 3 12A4

## சிறுகதை

| பிரிவு IV | பிரிவு V |
|---|---|
| 1. அ.கஜன் 1 11A | 1. க.கோபிகா 1 12A4 |
| 2. க.ஜெசிந்தா 2 11F | 2. ஜெ.நிரோஜா 2 12A4 |
| 3. சி.கிருஷிகா 3 11E | 3. ச.ஜர்சினி 3 12A4 |

## திறனாய்வு

பிரிவு V

1. க.பிரியதர்சனா 1 12A3
2. த.நிதர்சனா 2 12A1
3. ஆ.உஷாந்தினி 3 12A4

## குறுநாடகப் பிரதியாக்கம்

பிரிவு IV

1. ஜெ.லாவண்ஜா 1 11D
2. சி.மேனுஷா 2 11D
3. ப.நிதுர்சன் 3 11A

பிரிவு V

1. க.நிவேதா 1 12A2
2. யோ.தனுஜா 2 12A2
3. க.நிரோஜினி 3 12A4

## தமிழறிவு வினாவிடை (தி.போட்டி)

1. ச.குகப்பிரியா 12A2
2. வ.சரவணபவன் 12A1
3. த.கஸ்தூரி 12A1
4. இ.இராஜப்பிரவிந்தன் 11A
5. ஸ்ரீ.றம்யா 11D

## இசை (தனி)

| பிரிவு II | பிரிவு III |
|---|---|
| 1. கு.கௌசிகன் 1 7C | 1. ச.வானதி 1 8D |
| 2. சி.ஜனந்தன் 2 7B | 2. ச.விசாகன் 2 8A |
| 3. அ.நேதிகா 3 7D | 3. க.புவிதா 3 8F |

| பிரிவு IV | பிரிவு V |
|---|---|
| 1. ம.பிரசாந்தினி 1 10D | 1. சி.ஸ்ரீரேகா 1 12A |
| 2. வி.சொரூபிணி 2 11E | 2. தி.ஆரணி 2 12A |
| 3. ப.துளசி 3 11E | 3. மா.டிலக்சனா 3 12A |

### இசை குழு - I

| | |
|---|---|
| 1. ச.வானதி 8D | 2. க.புவிதா 8F |
| 3. க.கீர்த்தனா 9D | 4. நா.விபிசன்யா 8F |
| 5. ஸ்ரீ.சிவஜா 8F | 6. ப.சஜீபனா 9E |
| 7. க.கஸ்தூரி 9D | 8. க.சண்பிகா 9F |
| 9. இ.மயூரிகா 9F | |

### இசை குழு - II

| | |
|---|---|
| 1. ஸ்ரீ.சிவாத்மிகா | 2. ந.கவிப்பிரியா |
| 3. சி.தினேஷிகா | 4. வி.சொரூபிணி |
| 5. க.நளினி | 6. ப.அபிவர்ணா |
| 7. சி.பைரவி | 8. இ.கிருஷிகா |
| 9. பா.ஜீவிகா | 10. செ.சிந்தூரியா |

### நடனம் (தனி)

| பிரிவு II | பிரிவு III |
|---|---|
| 1. ஈ.வித்தகி 1 | 1. ச.மதுஷா 1 |
| 2. நி.சங்கவி 2 | 2. ப.திருத்தகி 2 |
| 3. த.ரஸீனா 3 | 3. தி.நவலாஜனி 3 |

| கணிதம் | | மாவட்ட நிலை | Z புள்ளி |
|---|---|---|---|
| K.சயந்தன் | A2B | 81 | 1.8645 |
| S.பார்த்தீபன் | 3B | 96 | 1.7761 |
| R.பிரதீசன் | A2C | 114 | 1.6759 |
| G.வனுஜா | BCS | 188 | 1.2542 |
| S.தனுஷா | B2C | 189 | 1.2537 |
| S.ஜெகதீபன் | BCS | 196 | 1.2132 |
| K.பிரசன்னா | BCS | 227 | 1.0437 |
| P.டிலானி | 3C | 250 | 1.0153 |
| G.சுகாந்தன் | A2C | 120 | 1.2827 |
| K.கௌதமி | B2C | 170 | 1.1204 |
| K.துஷாந்தன் | B2C | 195 | 1.0398 |

| வர்த்தகம் | | | |
|---|---|---|---|
| T.மிதிலா | 3A | 4 | 2.2290 |
| T.கார்த்திகா | 2AC | 67 | 1.3933 |
| P.கௌரிசங்கர் | 2AB | 88 | 1.3170 |
| S.திவாகரன் | A2C | 175 | 1.0157 |

| கலை | | | |
|---|---|---|---|
| K.மேனகா | 3A | 2 | 1.9909 |
| T.தனுஷன் | 3A | 4 | 1.9020 |
| M.அபிராமி | 3A | 7 | 1.8701 |
| S.சிவவாணி | 3A | 8 | 1.8686 |
| K.ஸ்ரீகாந்த | 2AB | 12 | 1.8162 |
| N.கோபிகா | 3A | 24 | 1.7571 |
| G.சுரேஜா | 2AB | 35 | 1.6927 |
| M.சௌமியா | 2AB | 43 | 1.6618 |
| T.ருஷாந்தினி | 2AB | 59 | 1.5926 |
| V.விஜயா | 3A | 66 | 1.5662 |
| S.நிசாந்தி | 2AB | 67 | 1.5649 |
| M.தணிகரன் | 2AB | 77 | 1.5455 |
| S.யதுர்ஷன் | A2B | 103 | 1.4889 |
| S.சிந்துஜா | A2B | 104 | 1.4865 |
| K.பிரதீபா | 2AB | 106 | 1.4790 |
| T.சங்கீதா | 2AB | 118 | 1.4554 |
| A.மயூரதி | A2B | 122 | 1.4381 |
| S.நிருஜா | A2B | 176 | 1.3600 |
| S.கம்ஷா | 2AB | 207 | 1.3235 |
| T.புவேதிகா | ABC | 208 | 1.3226 |
| S.தர்ஜா | A2B | 225 | 1.3097 |
| K.அர்ச்சனா | 3B | 244 | 1.2942 |
| P.ஜனா | 3B | 247 | 1.2902 |
| N.நிலானி | A2B | 249 | 1.2896 |
| S.சுகந்தினி | A2B | 291 | 1.2576 |
| T.பவித்ரா | A2B | 306 | 1.2476 |
| S.ஞானசேந்தன் | A2B | 312 | 1.2420 |
| N.குணாளன் | A2B | 313 | 1.2420 |
| V.கிருதுஷா | 3B | 331 | 1.1873 |

| | | | |
|---|---|---|---|
| K.கௌசிகா | ABC | 371 | 1.1873 |
| T.ரூபிகா | A2B | 375 | 1.1854 |
| V.விதுஷன் | ABC | 392 | 1.1700 |
| T.தேவிகா | ABC | 393 | 1.1693 |
| S.அஜித்தா | A2B | 398 | 1.1659 |
| N.ஜெகதீஸ் | 2AC | 418 | 1.1538 |
| N.நிரோஜினி | A2B | 427 | 1.1482 |
| M.தர்ஷிகா | ABC | 428 | 1.1481 |
| P.கேஜினி | 3B | 429 | 1.1478 |
| Y.கார்த்திகா | 3B | 444 | 1.1348 |
| S.சிந்துகா | ABC | 455 | 1.1259 |
| S.கிருஷாந்தி | ABC | 486 | 1.1034 |
| P.சிவபாதம் | B2C | 531 | 1.0717 |
| T.கொன்சிகா | 3B | 532 | 1.0713 |
| S.தசிந்தன் | ABC | 539 | 1.0689 |
| K.கேதுஜன் | ABC | 561 | 1.0538 |
| S.தர்சிகா | 3B | 598 | 1.0237 |

## டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கடந்த 08.01.2010 அன்று காலை எமது கல்லூரிப் பிரதான மண்டபத்தில் மேற்படி கருத்தரங்கு இடம்பெற்றது. அதிபர் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கை செஞ் சிலுவைச்சங்கமும், சாவகச்சேரி பொது சுகாதாரப் பணிமனை உத்தியோகத்தர்களும் இணைந்து நடத்தினர். பரவி வரும் டெங்கு நோயின் அபாயம் பற்றியும் இதனை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றியும் நாடக ஆற்றுகை மூலமாக சிறப்பான முறையில் தெளிவுறுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். காலத்தின் தேவை கருதிய சிறந்த கருத்தரங்காக இது அமைந்தது.

## நீர் மாசுபடுதல் தொடர்பான கருத்தரங்கு

தரைக்கீழ் நீரானது எமது பிரதேசத்தில் மாசுபட்டு வருகின்றமை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று 08.02.2010 IRD நிறுவனத்தினரின் அனுசரணையுடன் வைத்திய கலாநிதி நச்சினார்க்கினியார் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. கிறிஸ்டி இராஜேந்திரா அவர்களும் இதில் பங்கேற்றார். நீர் மாசுபடும் வழிமுறைகளும், அதனை மாசுறாமல் தடுக்கும் வழிவகைகள் பற்றியும் மாணவர்க்கு உரிய முறையில் சிறப்புற விளக்கமளிக்கப்பட்டது. பல்லூடக எறியி மூலம் நிழற்படங்களுடன் கூடிய விளக்கமளிக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மனிதக் கழிவுகள், விலங்குக் கழிவுகள் என்பன நீருடன் கலக்கும் நிலைமை காணப்படுவதாகவும் இதனைத் தடுப்பதற்கான வழிவகைகள் பற்றியும் நீர் அசுத்தமடைவதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் இக்கருத்தரங்கில் குறிப்பிடப்பட்டது.

## சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுச் செயற்திட்டம்

யாழ் சமூக செயற்பாட்டுமையத்தின் அனுசரணையுடன் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று எமது கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது. சுற்றுச் சூழல் ஏன் மாசுபடுகின்றது என்பது பற்றியும், மனித நடவடிக்கைகளினால் சூழல் மாசுபடுகிறது என்பதனை எடுத்துக் கூறியும், மேலும் சூழல் மாசுறாது தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் தெளிவான விளக்கமளிக்கப்பட்டதுடன் இது தொடர்பான கையேடு ஒன்றும் வழங்கப்பட்டது. இன்றைய சூழலில் மிகவும் அவசியமானதொரு கருத்தரங்காக இது உணரப்பட்டது.

## பாடசாலை அபிவிருத்திக்கான அதிர்ஷ்ட இலாபச்சீட்டு

எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலை அபிவிருத்திக்கான அதிர்ஷ்ட இலாபச் சீட்டு ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளனர். இதன் அறிமுக நிகழ்வு கடந்த 26.02.1010 அன்று காலை எமது கல்லூரிப் பிரதான மண்டபத்தில் அதிபர் அவர்கள் தலைமையில் இடம்பெற்றது. இதன் முதற்பிரதியை பழைய மாணவர் டாக்டர் அம்பிகைபாகன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்விற்கு பழைய மாணவர் சங்கச் செயலாளர், பொருளாளர் உட்பட பழைய மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர். பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் பழைய மாணவர்களினாலும் இச் சீட்டின் மூலமான நிதி சேகரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### அன்பளிப்பு

எமது கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் திரு குமாரவேல்ராஜா குடும்பத்தினர் எமது கல்லூரிக்கென பேச்சு ஸ்ரான்ட் ஒன்றை 30,000 ரூபா பெறுமதியுடையதாக அன்பளிப்புச் செய்துள்ளனர். மிகவும் நேர்த்தியான முறையிலும், அழகுறக் காட்சியளிக்கும் இச் சாதனத்தை அன்பளிப்புச் செய்து உதவிய திரு ம.குமாரவேல்ராஜா குடும்பத்தினருக்கு தடம் செய்தி ஏட்டினடாக கல்லூரிச் சமூகம் நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறது.

## தேசிய கலை இலக்கியப் போட்டி

கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் 2008, 2009 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப் போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் எமது கல்லூரி மாணவிகள் இருவர் வெற்றி பெற்று பரிசில்களும் சான்றிதழ்களும் பெற்றுள்ளனர். இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு 08.02.2010 அன்று யாழ் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

செல்வி.ஜெ.ஜெயதர்சினி (கட்டுரை - சிரேஷ்ட பிரிவு)

செல்வி இ.கபிலினி (சிறுகதை -கனிஷ்ட பிரிவு)

இவர்கள் மேலும் சிறப்புக்கள் பெற வேண்டு மென வாழ்த்துகின்றோம்.

## பங்குச் சந்தை தொடர்பான செயலமர்வு

எமது கல்லூரியில் கடந்த 18.02.2010 வியாழக்கிழமை காலை மேற்படி செயலமர்வு நடத்தப்பட்டது. இலங்கை பங்கு பரிவர்த்தனை பாதுகாப்பு ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட இச் செயலமர்வில் தரம் 12, 13 ஐச் சேர்ந்த மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## முதலாந் தவணைப் பரீட்சை – 2010

எமது கல்லூரியில் முதலாந் தவணைக்கான பரீட்சைகள் யாவும் பாடசாலை மட்டத்தில் வினாத்தாள் தயாரிக்கப்பட்டு சிறப்பான முறையில், நம்பகத்தன்மை வாய்ந்தவையாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

### அ. ஆறுமுகம் ஜே.பி தங்கப்பதக்கம் பரிசில் நிதியம்

மருத்துவத்துறையை ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட்டு வரும் இப்பரிசில் நிதியத்தில் திரு அ.ஆறுமுகம் ஜே.பி குடும்பத்தினரால் வழங்கப்பட்ட 30,000 ரூபா தேசிய சேமிப்பு வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது ஏற்கனவே உள்ள புலமைப்பரிசில் நிதியத்துடன் இது இணைக்கப்படும். (ஆறுமுகம் J/P புலமைப்பரிசில் நிதியம்)

க.பொ.த உயர்தர விஞ்ஞானப் பிரிவில் அதிகூடிய புள்ளிகள் பெற்று பல்கலைக்கழக மருத்துவத்துறைக்கு தெரிவாகும் மாணவருக்கு வழங்கப்படும். மேலும் க.பொ.த உயர்தர வகுப்பில் இரண்டு வருடமும் எமது கல்லூரியில் கற்றவராகவும் கல்லூரியின் நற்பெயரைப் பேணிப் பாதுகாக்கின்ற நற்குண நற்செய்கையு டையவராகவும் இருக்கும் மாணவருக்கே இது வழங்கப்படும்.


நவில் தொறும் நூல் நயம் போலும்பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு


முகம் நக நட்பது நட்பு அன்று நெஞ்சத்து
அகம்நக நட்பது நட்பு

(திருக்குறள் - நட்பு)




# புதிய கட்டடத்திறப்புவிழா







வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட நூலக, வகுப்பறைத் தொகுதி திறப்புவிழா கடந்த 16.03.2010 செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. பிரதமவிருந்தினராக வருகை தந்த கௌரவ மேஜர் ஜெனரல் G.A சந்திரசிறி அவர்கள் (ஆளுநர் வடக்கு மாகாணம்) இதனைத் திறந்துவைத்து சிறப்புரையாற்றினார். எமது கல்லூரி மாணவர்க்கான தேவைகள் உயர்தர வகுப்பு மாணவி செல்வி லக்ஷிகாவினால் எடுத்துக் கூறப்பட்டன. முன்னைநாள் அதிபர் திரு இ.கயிலைநாதன் அவர்கள் எமது கல்லூரித் தேவைகள் தொடர்பாக சிறப்புற எடுத்துக் கூறியமை குறிப்பிடத்தக்கதாகும்.



ஆளுநர் க்கான விளையாட்டு உபகரணங்கள், மற்றும் ஒரு தொகை துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்புச் செய்ததுடன் எமது பிரதான மண்டபத்தினை சிறப்புற நவீன வசதியுடையதாக அமைத்துத் தருவதற்காக கௌரவ ஜனாதிபதி அவர்களிடம் பரிந்துரை செய்வதாகவும் வாக்குறுதியளித்துச் சென்றமை சிறப்பான அம்சமாகும்.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு வீ.இராசையா அவர்கள் வடக்கு மாகாண பண்பாட்டு விளையாட்டத்துறை அமைச்சின் செயலாளர், திரு இளங்கோவன் அவர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளர் திரு அலெக்சாண்டர் சாள்ஸ் மற்றும் முன்னைநாள் அதிபர் திரு இ.கயிலைநாதன், பிரதி அதிபர் திரு செ.சபாரததினம் பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள் நலன்விரும்பிகள், பெற்றோர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



உன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானாகவே திருந்திவிடும்

## Provincial Level English Day Competition – 2009

We had our Provincial Level English Day Competition -2009 in September 2009 last Year at J/Vembady Girls' High School. Two of our school students have been selected inCreative Writing at the Provincial Level English Day Competition.

Miss. Sivananthan Nishanthi Gr.12 Creative Writing First Place
Miss, Kulasingam Kowsiga Gr.7 Creative Writing Second Place





These students are qualified to participate in the National Level English Day Competitions. We congratulate them and wish them all for their success in future.

## Baden Powell Day-2010.



Our school Baden Powell day was celebrated on 22nd February 2010 in our school Main Hall at 8.oo am. The Scouts of our school has arranged the function with great enthusiasm. The function started with the lighting of the traditional oil lamp by our school Principal Mr. A. Kailayapillai and the Scout Leader Mr.K.Kamalanathan made the welcome speech. After that flowers were strewn by the Principal, the leader of the Scouts and the members of the Scouts to the photo of Baden Powell.

Our Principal delivered a speech on "Our society and Scouting". He mentioned the history of scouting and how it spread all over the world. Then the troop leader Mas.S.Kreedi delivered a speech on "The life path of Baden Powell". After that the scouts sang songs and finally the Assistant Troop leader delivered the Vote of Thanks.



## Cadet Training



Three of our school students Mas.S.Kreedi, Mas.P.Kastro and Mas.B.Thilaxan had a chance to attend a Cadet Training at Randembe training centre. They started their journey to Randembe on 8th January 2010. Mr.P.Uthayakumar the teacher of our school also accompanied them. They reached during the night time on 8th January 2010 and had a party. They had a chance to see many interesting places. Everyday they had marching training in the mornings and in the evenings they had physical training. They also spent their leisure time in singing, dancing and playing games. They got training from an officer named Ekanayake who was the leader of the training. They also had a chance to get training from the captain major General Gamini Jayawardene.

The training lasted for ten days and for the first five days they had training under major general Gamini Jayawardene and other five days were for the entertainment. They also had an opportunity to see a cadet Cultural Programme in Colombo. They were able to watch a variety of group dancing and group singings and at the same time they also had an opportunity to be with the Sinhala boys and girls from other Districts. They returned home after getting ten days training on 17th January with having some unforgettable experiences.

### *Idioms*

*1. The unexpected new difficulties put me on my mettle. This means roused me to do my best*

*2. It is silly to me trouble half way this means to worry about something before it comes*

## எமது நோக்கு



கற்றல் கற்பித்தலையும் மாணவரின் ஒன்றிணைந்த ஆளுமை வளர்ச்சியையும் நோக்கங்களாகக் கொண்டு வகுப்பறை முகாமைத்துவம் ஒழுங்கமைக்கப்படுகின்றது. அந்த உன்னத நோக்கங்களை அடைவதற்குரிய வளங்களைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், ஆற்றுப்படுத்தல், கட்டுப்படுத்தல், மற்றும் நெறிப்படுத்தல் என்ற செயற்பாடுகள் வகுப்பறை முகாமைத்துவத்தில் உள்ளடங்குகின்றன. வரையறுக்கப்பட்ட வளங்களை உரியமுறையிலே உச்சப் பயன்பாட்டைத் தரும் வகையிலே ஒழுங்குற அமைத்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை உச்சமட்டங்களில் முன்னெடுத்தல், வகுப்பறை முகாமைத்துவத்தின் முக்கியமான இலக்காக அமைகின்றது. வகுப்பறையின் செயற்பாட்டு முகாமையாளர் ஆசிரியர். புலமையாற்றலும், மனிதம் சார் திறன்களும் இந்த வகுப்பறை முகாமையாளராகிய ஆசிரியர்களுக்கு வேண்டப்படுகின்றன. மாணவரை விளங்கிக் கொள்ளல், அவர்களை ஊக்குவித்தல், கற்றலில் ஈடுபாடு கொள்ளவைத்தல், சிறந்த இடைவினைகளையும், இசைவாக்கலையும் ஏற்படுத்தல் முதலியவை மனிதம்சார் திறன்களாகக் கொள்ளத்தக்கவை. வகுப்பறை முகாமைத்துவம் முற்றிலும் மாணவனின் உளவியல் மயப்பட்ட முகாமைத்துவமாகின்றது. மாணவரின் ஒழுக்கம் மற்றும் நடத்தைகளைப் பெற்றோர்களுடன் இணைந்து முகாமை செய்தலே பொருத்தமானதும், வினையாற்றல் கொண்டதுமாகும். மாணவரின் ஒழுக்க நடத்தைகளில் தெளிவான புலக்காட்சியைப் பெற்றோரிடத்தில் ஏற்படுத்தலும் வகுப்பறை முகாமைத்துவத்தின் செயற்பாடுகளுள் ஒன்றாகும். வகுப்பறைக்குரிய நடைமுறைகள், கட்டுப்பாடுகள், பக்கம் சாராமை முதலியவற்றின் வழியாக மாணவருக்குரிய பாதுகாப்பு உறுதி செய்யப்படல் வேண்டும். செயல்விதிகளும், வகுப்பறை நடைமுறைகளும் மாணவரது கற்றலை மேம்படுத்தும் வகையிலும், நல்லொழுக்கத்தை வளர்க்கும் வகையிலும் முகாமை செய்யப்பட வேண்டும். எந்தவித பாகுபாடும் காட்டாது அனைத்து மாணவரையும் சமகணிப்புடன் நோக்குகின்ற மாணவர் சமநிலை என்பது மிகவும் முக்கியமானதாகும். முன்னேற்றகரமான திறன்களைக் கொண்ட ஆசிரியர் என்ற தொடர் அண்மைக்காலமாக எடுத்தாளப்பட்டு வருகின்ற ஒன்றாகும். வகுப்பறையின் ஒழுங்கமைப்பிலே தீவிர கவனம் செலுத்துபவராக முன்னேற்றகரமான ஆசிரியர் விளங்குவார். வகுப்பறையில் தூய்மையும், புனிதத் தன்மையும் ஏற்படுத்தல் அவசியமாகும். சமகாலத்தில் வளர்ச்சி பெற்று வரும் நேர முகாமைத்துவம், நெருக்கடி முகாமைத்துவம், நெருக்கீட்டு முகாமைத்துவம், முரண்பாட்டு முகாமைத்துவம் முதலாகிய விடயங்கள் பற்றிய அறிவு வகுப்பறை முகாமைத்துவத்தை வளம்படுத்தும் ஆசிரியருக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் துணை செய்யவல்லது.

## வெளியீட்டுக்குழு

♦ **வெளியீட்டாளர்:**

திரு அ.கயிலாயபிள்ளை.(அதிபர்)
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)



♦ **ஆலோசனை:**

திரு ந. பாலச்சந்திரன்
பிரதி அதிபர்



♦ திரு வே.கந்தசாமி
பிரதி அதிபர்



திரு.சி.த. இரத்தினம்
உதவி அதிபர்



♦ பிரதம ஆசிரியர் :
திரு க.முத்துலிங்கம்



♦ ஆசிரியர் :
திருமதி வி.மகேந்திரன்
(தமிழ்)



திருமதி தே.கமலேஸ்வரன்
(ஆங்கிலம்)



♦ **கணனி வடிவமைப்பு.**
திரு.நா.இராஜன்



♦ **கணனிப்பதிவு:**
திருமதி க.நளாயினி



**அனுசரணை: ஆசிரிய சகோதரத்துவம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

NEWS LETTER

TO, ..............................................
..............................................
..............................................
..............................................

FROM , PRINCIPAL,
J/CHAVAKACHCHERI
HINDU COLLEGE
CHAVAKACHCHERI
T.P 0213215189

**Web - WWW ChC.lk**
**T.P.No: 021 3215189**
**Email : chavahindu@gmail.com**